# முருக்கன்தீவுப் பிராந்தியத்தின் வரலாற்றுத் தொன்மை

Ms. Gowry P. *Lecturer (Prob),* Department of History, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka

pgowry24@yahoo.com, pgowry1987@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் பூர்வீக வரலாறானது ஆரம்பத்தில் மகாவம்சம் முதலான இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டதாகவே வெளிப்படுத்தப்பட்டது. எனினும் தொல்லியலில் ஏற்பட்ட வளர்ச்சி இந்நிலையில் மாற்றங்களை உண்டுபண்ணி ஆதாரங்களுடனான வரலாற்றைக் கட்டியெழுப்பியுள்ளது. ஆயினும் கிழக்கிலங்கையில் ஆய்விற்கு உட்படுத்தப்படாது பல இடங்கள் காணப்படுகின்ற அதேநேரம், இதுவரை அடையாளங் காணப்படாத வரலாற்றுத் தொன்மைமிக்க பிரதேசங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் முருக்கன்தீவு எனுமிடத்தின் வரலாற்றுத் தொன்மையை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கோரளைப்பற்று தெற்குப் பிரதேசத்திற்குட்பட்ட கிராமமான முருக்கன் தீவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வொன்றில் சில தொல்லியல் எச்சங்களை அடையாளங் காணமுடிந்தது. இவ்வெச்சங்களின் தொன்மையை ஆய்வு செய்து வெளிப்படுத்துவதன் ஊடாக பிராந்தியத்தின் தொன்மையை ஆதாரத்துடன் தெளிவுபடுத்தல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். பிராமிச் சாசனம் பொறிக்கப்பட்ட கற்பலகை, நடுகற்கள், மட்குடம், சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள், சிப்பிகள், சங்குகள் போன்றன முருக்கன்தீவில் கிடைத்தமை வரலாற்றுக் காலத்தின் முற்பகுதியில், அதாவது கி.பி முதலாம் நூற்றாண்டுகளில் இங்கு நாகரிகமிக்க மக்கள் வாழ்க்கை காணப்பட்டுள்ளது என்பதற்கு சிறந்த சான்றாக அமைகின்றன. ஆயினும் அதனை உறுதிசெய்வதற்கு மேலும் பல ஆதாரங்கள் எமக்குத் தேவைப்படுகின்றன. இப்பகுதியானது முழுமையான தொல்லியல் அகழ்வாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும். அவ்வாறு ஆய்வு மேற்கொள்ளப்படுவதனூடாக இப்பிராந்தியத்தின் வரலாறு மட்டுமின்றி மட்டக்களப்பு தேசத்தின் வரலாறும் ஆதாரத்துடன் வெளிக்கொண்டுவரப்படும். இது மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் முதலான இலக்கியங்களுடன் இணைந்து மட்டக்களப்பு பிராந்தியத்தின் ஆதாரபூர்வமான வரலாற்றைத் தெளிவாக்கும் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடுமில்லை.

அரும்பதங்கள்: தொல்லியல் ஆய்வு, தொல்லியல் எச்சங்கள், பிராமிச் சாசனம்

## 1.0 ஆய்வு அறிமுகம்:

இலங்கையின் பூர்வீக வரலாறானது ஆரம்பத்தில் மகாவம்சம் முதலான இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டதாகவே வெளிப்படுத்தப்பட்டது. எனினும் தொல்லியலில் ஏற்பட்ட வளர்ச்சி இந்நிலையில் மாற்றங்களை உண்டுபண்ணி ஆதாரங்களுடனான வரலாற்றைக் கட்டியெழுப்பியுள்ளது. அனுராதபுரம், பொலநறுவை முதலான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வரலாற்றில் ஒரு தெளிவான போக்கை உருவாக்கியது. இருந்தபோதிலும் நாட்டின் சகல பாகங்களிலும் இத்தகைய ஆய்வு நடைபெறாமை இலங்கையின் முழுமையான வரலாற்றை உண்மைத்தன்மையுடன் வெளிக்கொண்டுவருவதில் சிக்கல் தன்மையைத் தோற்றுவித்துள்ளது. சமூகங்களின் வரலாறுகள் மறைக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் வரும் இன்றைய சூழலில் ஒவ்வொருவரும் தமது வரலாற்றைக் கண்டறிய வேண்டிய தேவை உள்ளது. ஒவ்வொரு தேசத்து மக்களும் தங்களுக்கென்றுள்ள தனித்துவமான வரலாற்றைத் தேடிய பயணத்தை தொடர்ந்து கொண்டேயுள்ளனர். அந்தவகையில் இலங்கையில் பூர்வீக காலம் முதலாக தமிழர் செறிந்து வாழ்கின்ற பிராந்தியங்களுள் ஒன்றாக விளங்குகின்ற மட்டக்களப்பில் தொல்லியல் ஆய்வுகளின் நிலை மிக இழி நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கிழக்கில் கதிரவெளி முதலான இடங்களில் தொல்லியல் ஆய்வு முயற்சிகள் இடம்பெற்றிருந்த போதிலும் அவை தொடர்ச்சியானதாகவோ முழுமையானதாகவோ அமைந்திருக்கவில்லை.[1] அந்தவகையில் கிழக்கில் உள்ள முருக்கன்தீவு எனுமிடத்தின் வரலாற்றுத் தொன்மையை தெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது.

## 2.0 ஆய்வின் நோக்கங்கள்:

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கோரளைப்பற்று தெற்குப் பிரதேசத்திற்குட்பட்ட கிராமமான முருக்கன் தீவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வொன்றில் சில தொல்லியல் எச்சங்களை அடையாளங் காணமுடிந்தது. இவ்வெச்சங்களின் தொன்மையை ஆய்வு செய்து வெளிப்படுத்துவதன் ஊடாக பிராந்தியத்தின் தொன்மையை ஆதாரத்துடன் வெளிப்படுத்தல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

### 2.1 உப நோக்கங்கள்

2.1.1 முருக்கன் தீவுப் பிரதேசத்தில் கிடைத்துள்ள தொல்லியல் எச்சங்களின் தொன்மையை ஆய்வு செய்தல்.

---

[1] தங்கேஸ்வரி.க, கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு, மணிமேகலைப் பிரசுரம், 2007

2.1.2 கிடைத்துள்ள தொல்லியற் பொருட்களினூடாக வெளிப்படுத்தப்படுகின்ற வரலாற்றம்சங்களை தெளிவுபடுத்தல்.

2.1.3 இப்பிராந்தியத்தின் தொன்மையை உறுதிப்படுத்தல்.

2.1.4 மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் வாழ்ந்த காலத்தை ஆதாரத்துடன் வெளிப்படுத்தல்.

2.1.5 எதிர்காலத்தில் இப்பிராந்தியத்தில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை தெளிவுபடுத்தல்.

**3.0 தரவு சேகரித்தல் கருவிகள்**

இவ்வாய்வானது நேரடியான களவாய்வை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கண்டறியப்பட்ட விடயங்கள் முன்னர் செய்த ஆய்வு நூல்கள், ஆவணங்கள், கல்வெட்டுக்கள் போன்றவற்றுடன் ஒப்பீடு மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளமையால் இதுவொரு ஒப்பீட்டு ஆய்வாகவும் அமைகின்றது. இவ்வாய்வுக்காக கள ஆய்வில் நேரடியாகப் பெறப்பட்ட முதன்நிலைத் தரவுகளுடன் ஆய்வுப் பிரதேசத்தின் கல்வெட்டுக்கள், ஏனைய ஆய்வு நூல்கள், கட்டுரைகள் முதலான இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**4.0 ஆய்வுப் பிரதேசம்:**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே கோரளைப்பற்று தெற்குப் பிரதேசத்திற்குட்பட்ட கிராமமே முருக்கன் தீவு. பிரதான வீதியிலிருந்து ஏறத்தாழ 1.5 கி.மீ தூரத்தில் அமைந்திருக்கும் கிண்ணையடி எனும் பழம்பெரும் ஊரினூடகச் சென்று, கிண்ணையடி ஆற்றைக் கடந்து சென்றால் முருக்கன் தீவு அமைந்துள்ளது. முருக்கன் தீவுப் பிரதேசத்தில் தற்போது ஏறத்தாழ 50 குடும்பங்கள் வசிக்கின்றனர். அவர்கள் சேனைப் பயிர்செய்கை, மாடு மேய்ப்பு, விவசாயம், மீன்பிடி போன்றவற்றை தமது வாழ்வாதாரத் தொழில்களாக மேற்கொள்கின்றனர். 1950ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ்வூரில் ஐந்தாறு குடும்பங்கள் வாழ்ந்ததாகவும், பின்னர் பல குடும்பங்கள் கிண்ணையடி முதலான ஊர்களிலிருந்து வந்து வாழத் தொடங்கியதாகவும் கூறப்படுகின்றது. பழமைவாய்ந்த இவ்வூரின் தொல்லியற் தடயங்களைக் கண்டறியும் ஆய்வு முயற்சியொன்று கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களாகிய அ.சதானந்தன், க.சந்திரமேகன், க.சிவதர்ஷன் ஆகியோரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. அம்முயற்சியின் பயனாக அவ்வூரின் தொன்மையை வெளிப்படுத்தும் வகையிலான சான்றுகள் கிடைத்தன.

**5.0 மட்டக்களப்பு தேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னைய தொல்லியல் ஆய்வு முயற்சிகள்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே அமைந்துள்ள கதிரவெளி எனுமிடத்தில் பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு மகாவலி ஆற்றின் கழிமுகப்பகுதியில் 'குரங்கு படையெடுத்த வேம்பு' எனப்படும் இடத்தில் பாறைக்கற்களால் அமைக்கப்பட்ட கற்கிடை அடக்கங்கள் காணப்படுகின்றன. 1920களிலிருந்து இத்தொல்லியல் தளத்தின் முக்கியத்தவம் அறியப்பட்டிருந்தாலும் இங்கு முழுமையான ஆய்வு நடத்தப்படவில்லை. பெருங்கற்காலத்தில் இப்பகுதியில் முக்கியமான ஒரு குடியிருப்பு இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சுற்றாடலில் காணப்படும் வேறு தொல்லியல் சான்றுகள் உறுதி கூறுகின்றன. பிராமிக் கல்வெட்டுகள் இங்கிருந்து கிட்டிய தூரத்தில் சேருவில, இலங்கைத்துறை, ஈச்சிலம்பத்தை ஆகிய இடங்களில் உள்ளது. அத்துடன் இலங்கைத்துறையில் கரும் செம் கலவோடுகள் கிடைத்துள்ளன.[2]

கிழக்கு கரையோரத்தின் தென்பகுதியிலும் தென் மாகாணத்தின் கிழக்குப் பகுதியிலும் சில இடங்களில் ஆறுகளின் கழிமுகப் பகுதிகளிலேயே தொல்பொருட் சான்றுகள் கிடைத்துள்ளன. அம்பாறையின் தென்னெல்லையான குமுக்கன் ஓயாவிற்கு வடக்கே உள்ள பல இடங்களில் பெருங்கற்பண்பாட்டிற்குரிய கரும்செம் கலவோடுகள் கிடைத்துள்ளன. பாணமைப் பகுதிகளிலும் இவ்விதமான தொல்பொருட்சின்னங்கள் காணப்படுகின்றன. அதற்குத் தெற்கில் உகந்தையில் பெருங்கற்பண்பாடுக் கால ஈமக் கற்கிடக்கைகள் இருப்பதை 1920 களில் சிலர் அவதானித்துள்ளனர்.[3] இவ்வாறு ஆய்விற்கு உட்படாது பல இடங்கள் காணப்படுகின்ற அதேநேரம், கிழக்கில் இதுவரை அடையாளங் காணப்படாத வரலாற்றுத் தொன்மைமிக்க பிரதேசங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அண்மைக்காலங்களில் பல மேலாய்வுகள் பேராசிரியர் சி.பத்மநாதன் மற்றும் பேராசிரியர் ப.புஷ்பரெட்ணம் ஆகியோராலும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் அவை அகழ்வாய்வுகளாக அன்றி மேலாய்வுளாக அமைந்தமையால் மட்டக்களப்பு பிராந்தியத்தின் தெளிவான வரலாற்றை வெளிக்கொண்டுவருவதில் கால தாமதம் நிலவுகின்றது.

**6.0 ஆய்வுப் பிரதேசத்தில் கண்டறியப்பட்டுள்ள தொல்லியற் தடயங்கள்**

---

[2] இந்திரபாலா.கா, இலங்கையில் தமிழர், குமரன் வுக் ஹவுஸ், 2006, பக்-102-103


[3] www.puthinappalakai.com

### 6.1 பிராமிச் சாசனம் பொறிக்கப்பட்ட கற்பலகை

முருக்கன்தீவுப் பிரதேசத்தில் முருகனாலயம் ஒன்று அமைந்துள்ளது. மக்கள் நீண்ட காலத்திற்கு முன்னரே இவ்விடத்தில் வேல் வைத்து முருகனை வழிபடத்தொடங்கியுள்ளனர். ஆயினும் கோயிற் கட்டடம் 1986ஆம் ஆண்டளவிலே தான் கட்டப்பட்டுள்ளது. இந்த முருகன் கோயிலின் முன்றலில் படிக்கற்களாக இரு நீள்சதுரமான கற்துண்டுகள் போடப்பட்டுள்ளன. ஏறத்தாழ 6 அடி நீளமானவையாக இவை காணப்படுகின்றன. செம்மையாக வெட்டப்பட்ட இக்கற்களை தற்செயலாக நோக்கிய போது மேலிருந்த கல்லில் சில எழுத்துக்களை எம்மால் அவதானிக்க முடிந்தது. எனவே அதனைச் சுத்தம் செய்து பார்த்தபோது, அதில் கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரை தென்னாசியத் துணைக்கண்டத்தில் எழுதப்பட்ட ஆவணங்களில் காணப்பட்ட பிராமி எனும் வகைக்குரிய வரிவடிவங்களைக் காணமுடிந்தது. தமிழகத்தில் வழங்கிய இந்த எழுத்து முறையில் தமிழுக்குச் சிறப்பான எழுத்துக்களான ழ,ள,ற,ன ஆகியன அமைந்திருந்தமையால் அது தமிழ் பிராமி(தமிழி) என்று அழைக்கப்பட்டது.

இலங்கையில் ஏறத்தாழ 2000இற்கு மேலான பிராமிச்சாசனங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் பிராகிருதச் சொற்களுடன், தமிழ் மொழிச் சொற்களும் காணப்படுகின்றன. 'கி.மு முதல் மூன்று நூற்றாண்டுகளில் இலங்கையில் தமிழ் ஒரு பேச்சு மொழியாக விளங்கியமைக்கு ஆதாரமாய் பிராமிச் சாசனங்கள் அமைகின்றன' என பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் தமது 'இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளமை இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.[4] அளவிற் சிறிய இச்சாசனங்கள் பெரும்பாலும் தான சாசனங்களாகவே அமைகின்றன.

முருக்கன் தீவில் கிடைத்த சாசனத்தை வாசிக்க முற்பட்டபோது அதனை முழுவதுமாக எம்மால் வாசிக்க முடியவில்லை. இரு எழுத்துக்களை மட்டுமே அடையாளம் காண முடிந்தது.



'ர, த' என்பதாக இவ்வெழுத்துக்கள் காணப்படுகின்றன. ஆயினும் இதனூடாக எந்தவொரு தகவலையும் அறிந்துகொள்ள முடியவில்லை. அக்கற்பலகை நீண்ட காலமாக படிக்கற்களாக பயன்படுத்தப்பட்டமையால் வாசகத்தின் பிற்குதி பெருமளவில் சிதைவடைந்துள்ளது. இருந்தபோதிலும் பிராமிச் சாசனங்கள் கண்டறியப்பட்டமையானது இப்பிராந்தியத்தில் எழுத்தறிவுமிக்க மனித சமுதாயமொன்று முற்காலத்திலேயே வாழ்ந்துள்ளது என்பதற்கு சிறந்த சான்றாக அமைகின்றது.

இக்கற்பாறைகள் சில வருடங்களின் முன்பு கோயிலிற்குப் பின்னே ஏறத்தாழ 15 மீற்றர் தொலைவில் குழிகளை வெட்டியபோது கிடைத்தவையாகும். அவ்வூர் மக்கள் சில தேவைகளின் பொருட்டு குழிகளை வெட்டியபோது சீராக வெட்டப்பட்ட நீள்சதுர வடிவிலான ஏராளமான கற்சலாகைகள் அவ்விடத்தில் காணப்பட்டுள்ளது. அவற்றில் இரண்டு சலாகைகளே கோயிலின் முன்றலில் போடப்பட்டுள்ளவையாகும. ஆயினும் தற்போது அவ்விடம் மண்ணால் மூடப்பட்டுள்ளது. அவற்றினை ஆராய்வதற்கு எவ்வித அனுமதியும் எமக்கு இல்லையாதலால் அவர்கள் கூறியவற்றை எம்மால் உறுதி செய்ய முடியவில்லை. எனினும் இதேபோன்று கற்சலாகைகள் பூமியில் பதித்து வைத்திருந்த நிலையில் கதிரவெளியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் பரணவிதான 'கதிரவெளியில் கற்களை நீள்சதுர சலாகைகளாக வெட்டியெடுத்து பூமியில் பதித்து வைத்திருந்தனர். இது இயக்க வழிபாட்டுடன் தொடர்புபட்டது' எனக் கூறுகின்றார்.[5] எனவே முருக்கன் தீவிலும் இயக்க வழிபாடு காணப்பட்டுள்ளது என்பதை அவரது கூற்றின் மூலம் தெளிவாக்கிக் கொள்ள முடிகின்றது. தென்னிந்தியாவில் இத்தகைய கற்சலாகைகள் மூலம் நடுகல் வணக்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### 6.2 நடுகற்கள்

முருக்கன் தீவுப்பகுதிகளில் நடுகல் வழிபாடு நடைபெற்றமைக்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் இறந்த வீரர்களது நினைவாக வீரக்கற்கள் நிறுவப்பட்டன. பழந்தமிழ் இலக்கியங்களான புறநானூறு(12 பாடல்கள்), அகநானூறு(11 பாடல்கள்), ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, ஐங்குறுநூறு, திருக்குறள், தொல்காப்பியம் ஆகிய இலக்கியங்களில் நடுகல் வழிபாடு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பெருங்கற் காலத்தில் இறந்தோரின் நினைவாக குத்துக்கல் (Menhir) எனப்படும் நினைவுக் கற்கள் எழுப்பப்பட்டன. இவை முற்றிலும் உருவம் வரையப்படாதவை. கி.மு 1000 முதல் கி.மு 500 வரையான காலத்தில் இந்நிலையைக் காணலாம்.[6] பிற்காலத்தில் அவற்றில் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டது. பொதுவாக ஆனிரை மீட்பின் போது இறந்த வீரர்களின் நினைவாக இவை நடப்பட்டன. பின்னர் இவற்றில் எழுதப்பட்டதுடன் உருவங்களும் வரையப்பட்டன. புலிமான்கொம்பை, தாதப்பட்டி, பொற்மணற்கோட்டை முதலான இடங்களில் நடுகற்கள் கிடைத்துள்ளன. நடுகற்கள் வீரர்களுக்காக மட்டுமின்றி வீரத்துடன் போராடி உயிர்துறந்த கோழி, நாய் (அரசிலாபுரம், எடுத்தனூர்) என்பவற்றுக்கும் எடுக்கப்பட்டன.

---

[4] பத்மநாதன்.சி, இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்-கொழும்பு, 2006

[5] Ceylon Journal of Science, Vol.ii-1928 December 1933 February,pp.94-95

[6] கிருஷ்ணமூர்த்தி.ச, நடுகற்கள், மெய்யப்பன் பதிப்பகம், 2004

முருக்கன்தீவில் அமைந்துள்ள முருகன் கோயிலின் பின்புறம் உள்ள காணியில் மூன்று குத்துக் கற்களை எம்மால் அவதானிக்க முடிந்தது. இவை சீராக வெட்டப்பட்டவாறு காணப்படுகின்றது. அத்துடன் முருக்கன்தீவை அடுத்துள்ள ஊரான சாராவெளியில் ஓரிடத்தில் இத்தகைய கற்களை ஏராளமாகக் கண்டோம். இவை யாவும் சீராக வெட்டப்பட்டு ஏதோவோர் ஒழுங்கில் மண்ணில் புதைக்கப்பட்டுள்ளமையினை எம்மால் அவதானிக்க முடிந்தது. தற்போது இவ்விடத்தில் வைரவருக்குரிய பந்தல் அமைக்கப்பட்டு பூசைகள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் கருங்காலிப்படிபட்டி எனுமிடத்தில் நடுகல் நடப்பட்ட இடத்தில் தற்போது வைரவர் வழிபாடு நடத்தப்பட்டு வருகின்றமையை இங்கு சுட்டிக்காட்டல் அவசியமாகும். முருக்கன்தீவில் உள்ள கற்கள் நடுகற்களாகவே இருத்தல் வேண்டும். அவ்வாறாயின் புராதன காலத்தில் இப்பிரதேசத்தில் நடுகல் வழிபாடு நடைபெற்றுள்ளமை தெளிவாகின்றது.

### 6.3 மட்குடம் மற்றும் மட்கலவோடுகள்

பிராமிச் சாசனம், நடுகல் என்பனவற்றுடன் மேலும் சில தொல்பொருட் தடயங்கள் எமக்குக் கிடைத்தன. அவ்வூரவர் ஒருவருக்கு கிணறு வெட்டும் போது ஏறத்தாழ 5 அடி ஆழத்தில் சிதைவுறாத நிலையில் மற்குடமொன்று கிடைத்துள்ளது. மிகக்கனமானதாகவும் சிவப்பு நிற மட்பாண்டமாகவும் இது காணப்படுகின்றது. அதில் ஒரே மாதிரியான அலங்கார வேலைப்பாடுகள் வரையப்பட்டுள்ளன. ஆயினும் அதில் எவ்வித எழுத்துக்களோ குறியீடுகளோ காணப்படவில்லை. இலங்கை மற்றும் தமிழகத்திலும் பல இடங்களில் இத்தகைய மட்பாண்டங்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனைக்கோட்டையில் பேராசிரியர் கா.இந்திரபாலா தலைமையில் 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தொல்லியல் அகழ்வாய்வொன்றில் கிடைத்த மட்கலங்கள் சில முழுமையும் சிவப்பு நிறமானவையாகவும், சில உள்ளே கறுப்பும், வெளியே சிவப்பு நிறமானவையாகவும் காணப்படுகின்றன. அத்துடன் வெளிப்பகுதிகளில் பலவித வண்ணக் கோடுகளினால் அலங்கரிக்கப்பட்டும் இவை காணப்படுகின்றன.[7] ஆயினும் முருக்கன்தீவில் கிடைத்துள்ள மட்குடத்தில் காணப்படுகின்ற கோடுகளிற்கும் கந்தரோடை மட்பாண்டத்திலுள்ள கோடுகளிற்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. வட இலங்கையில் கிடைத்த பல மட்பாண்டங்களில் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்ற போதிலும் இங்கு கிடைத்த மட்கலத்தில் எவ்வித எழுத்துக்களும் இடம்பெறவில்லை.

ஆனால் இக்கலவோட்டை ஒத்தவகையிலான கலவோடுகள் தென்னிந்தியாவில் ஆந்திரா நெல்லூர் மாவட்டத்தில் உள்ள கோட்டைப்பட்டினம் எனும் ஊரில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது கிடைக்கப்பெற்றுள்ளது. இது தென்னிந்திய ஆய்வாளர்களால் பாய் அழுத்தப் பதிவு (Mat impression) எனப்படுகின்றது.[8] இவை சுமார் இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக ஆய்வாளர்களால் கணிக்கப்பட்டுள்ளன. முருக்கன்தீவில் கிடைத்துள்ள மட்கலமும் அதன் மீதுள்ள கோடுகளும் கோட்டைப்பட்டின கலவோடுகளை ஒத்துள்ளன. தமிழ் நாட்டின் தொல்லியல் ஆய்வாளர்களான முனைவர் சு.இராஜகோபால் மற்றும் எஸ்.ஜதீஸ்குமார் ஆகியோரும் இக்கருத்தினை ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே இம்மட்கலம் வரலாற்றுக் காலத்தின் முற்பகுதிக்குரியது என்பது நிருபிக்கப்பட்டுள்ளது. அதாவது ஏறத்தாழ கி.பி நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளிற்குரியதாக இருக்கலாம்.

முருக்கன் தீவின் பல பகுதிகளிலும் ஏறத்தாழ 8, 9 அடிகள் தோண்டினால் சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகளை காண முடியும் என அவ்வூர் மக்கள் தெரிவித்தனர். முருக்கன் தீவில் மட்டுமின்றி அதனை அடுத்துள்ள சாராவெளி முதலான ஊர்களிலும் கிணறு முதலிய தேவைகளுக்காக குழிகளைத் தோண்டிய போது இத்தகைய மட்பாண்டத் துண்டுகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. சாராவெளியில் உள்ள பிள்ளையார் கோவிலிற்கான தீர்த்தக் கிணறிற்கான குழி தோண்டிய போது கிடைத்த சில மட்கலவோடுகளை எம்மாற் காணமுடிந்தது. இப்பகுதிகளில் பொதுவாக இரண்டு அடிகளுக்கு மேல் தோண்டினால் கடற்சிப்பிகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. பிராமிச் சாசனம் பொறிக்கப்பட்ட கற்பலகை, நடுகற்கள், மட்குடம், சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள், சிப்பிகள், சங்குகள் போன்றன முருக்கன்தீவில் கிடைத்துள்ளன.

ஆனைக்கோட்டையில் 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தொல்லியல் அகழ்வாய்வில் பெருங்கற்காலப் பண்பாட்டின் சிறப்பம்சங்களாகிய கரும் செம் மட்பாண்டங்கள், சிப்பிகள், சங்குகள், றோம மட்பாண்டங்கள், இரும்பாயுதங்கள், இரு மனித எலும்புக் கூடுகள் என்பன கிடைத்தன. பானைகளும் கிடைத்துள்ளன.[9] முருக்கன்தீவிலும் இதையொத்த முக்கியத்துவம் வாய்ந்த பல சான்றுகள் எமக்குக் கிடைத்துள்ளன. எனினும் இவை பெருங்கற் காலத்திற்குரியவை என அறுதியாகக் கூறுவதற்கான சான்றுகள் எமக்குப் போதுமானதாக இல்லை. இருந்தபோதிலும் கி.பி நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் இங்கு நாகரிகமிக்க மக்கள் வாழ்க்கை காணப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது.

---

[7] சிற்றம்பலம்.சி.க, யாழ் மாவட்டத்தின் அண்மைக் கால தொல்லியல் ஆய்வும் ஆதிக்குடிகளும், தமிழ் மன்றம்- யாழ் பல்கலைக் கழகம், 1982, பக்:56-58

[8] Nohru Karasima(Editor), Ancient and Medieval commercial activities in the Indian Ocean: Testimony of Inscriptions and ceramic – sherds, Taisho University, 2000

[9] சிற்றம்பலம்.சி.க, யாழ் மாவட்டத்தின் அண்மைக் கால தொல்லியல் ஆய்வும் ஆதிக்குடிகளும், தமிழ் மன்றம்- யாழ் பல்கலைக் கழகம், 1982, பக்:56-58

பிரதேசம் ஒன்றின் உண்மைத் தன்மையான வரலாற்றை எழுதுவதற்கு இலக்கியச் சான்றுகள் மட்டும் போதுமானவையன்று. அவ்விலக்கியங்களில் கூறப்படுகின்ற விபரங்கள் சமகாலத்து ஆவணங்களுடன் ஒத்துப் போகின்ற போது அவ்வரலாறு உறுதிபெறுகின்றது. மட்டக்களப்பு வரலாற்றைக் கூறுகின்ற பிரதான மூலமாக மட்டக்களப்பு பூர்வ சரித்திரமே விளங்குகின்றது. இதனை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்பின் வரலாற்றை ஆதாரபூர்வமாகக் வெளிக்கொண்டுவர முடியாது. கல்வெட்டுக்களின் காலத்தை அளவிடுகின்ற போது அது பெருமளவு நம்பகத் தன்மை வாய்ந்ததாக இருக்கும். இதனால் உண்மைத் தன்மைமிக்க விவரங்களை அறிந்து கொள்வதற்கான மிக முக்கியமான ஆவணங்களாக இவை விளங்குகின்றன.

இங்கு கிடைத்துள்ள தொல்லியற் சின்னங்களினூடாக கி.பி நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் இங்கு நாகரிகமிக்க மக்கள் வாழ்க்கை காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. ஆயினும் இதனை உறுதிசெய்வதற்கு மேலும் பல ஆதாரங்கள் எமக்குத் தேவைப்படுகின்றன. இப்பகுதியானது முழுமையான தொல்லியல் அகழ்வாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும். அவ்வாறு ஆய்வு மேற்கொள்ளப்படுவதனூடாக மட்டக்களப்பில் அடையாளங் காணப்பட்டுள்ள இத்தளத்தின் வரலாறும் தொன்மையும் வெளிக்கொண்டுவரப்படும். இது மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் முதலான இலக்கிய மூலாதாரங்களோடு இணைந்து மட்டக்களப்பு பிராந்தியத்தின் வரலாற்றைத் தெளிவாக்கும் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடுமில்லை.

உசாத்துணை


1. இந்திரபாலா.கா (2006), இலங்கையில் தமிழர், குமரன் வுக் ஹவுஸ்
2. கிருஷ்ணமூர்த்தி.ச (2004), நடுகற்கள், மெய்யப்பன் பதிப்பகம்
3. சிற்றம்பலம்.சி.க(1982), யாழ் மாவட்டத்தின் அண்மைக் கால தொல்லியல் ஆய்வும் ஆதிக்குடிகளும், தமிழ் மன்றம்- யாழ் பல்கலைக் கழகம்
4. சிற்றம்பலம்.சி.க (1993), யாழ்ப்பாணம்- தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு
5. தங்கேஸ்வரி.க(2007), கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு, மணிமேகலைப் பிரசுரம்
6. பத்மநாதன்.சி (2006), இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு
7. Nohru Karasima(Editor)(2000), Ancient and Medieval commercial activities in the Indian Ocean: Testimony of Inscriptions and ceramic – sherds, Taisho University
8. www.puthinappalakai.com